


உ





# பூர்ண பலம்

## ஆன்மீக மின் சஞ்சிகை (SPIRITUAL E-MAGAZINE)

ஸ்ரீ மஹாபெரியவா வேத வ்ருக்ஷ சம்ரக்ஷண சங்கம் டிரஸ்ட் மாத வெளியீடு

(புரட்டாசி – SEPTEMBER – 2022)





“நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே இராம என்ற இரண்டெழுத்தினால்”

# உள்ளடக்க அட்டவணை

தோரண வாயில் .......................................................................................................... 4

ஸ்ரீ மஹாபெரியவா அருளுரை .............................................................................................. 5

அரிய ஆலயமும் அற்புத தகவல்களும் (1) ................................................................... 7

அரிய ஆலயமும் அற்புத தகவல்களும் (2) ................................................................... 9

நம்பினோர் கெடுவதில்லை.......................................................................................... 11

தெரிந்த புராணம், தெரியாத கதைகள் .......................................................................... 13

பலன் தரும் பதிகங்கள்............................................................................................... 14

பல்சுவை பகுதி............................................................................................................ 17

இந்த ஆன்மீக மின் சஞ்சிகை விற்பனைக்கு அல்ல.

ஆசிரியர்: கி. வேணுகோபால்
இணை ஆசிரியர்: ச. இராஜலக்ஷ்மி

எண்ணம் மற்றும் வடிவம்: VVSS Trust-இன் நண்பர்கள்

அட்டை மற்றும் பக்கம் 8,9 மற்றும் 13-இல் உள்ள படங்கள் அனைத்தும் கூகிள் படத் தேடல் (Google Image Search) மூலமாய் பெற்றவை. இவை விளக்க நோக்கத்திற்காக மட்டுமே.

மற்ற படங்களின் அனைத்து உரிமைகளும் ஶ்ரீ மஹாபெரியவா வேத வ்ருக்ஷ சம்ரக்ஷண சங்கம் டிரஸ்டையே (VVSS Trust) சாரும்.

இந்த மாத பிரசுரம் வெளிவர உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எங்கள் நன்றி.

# தோரண வாயில்

## ஆசிரியர் முன்னுரை

அன்பு சொந்தங்களுக்கு நெஞ்சார்ந்த வணக்கம். உங்கள் பூர்ண பலம் - புரட்டாசி மாத இதழுக்கு அன்புடன் வரவேற்கிறேன். புனிதமான புரட்டாசி மாதத்தின் பூர்ணபலம் உங்கள் பார்வைக்கு. வழக்கமான விஷயங்கள்தான். படித்து பயன் பெறுங்கள். இம்மாதம் பெருமாளுக்கு உரியது. எனவே அட்டை படத்தையும் அவரே அலங்கரிக்கிறார்.



இடம்: எனது இல்லம், சின்ன காஞ்சிபுரம். பின்னல் அருள்மிகு தேவராஜ சுவாமி கோயில்
Image taken at my home, in the background is Kanchipuram Sri Devaraja Swamy Temple

அறிய ஆலயங்கள் பகுதியிலும் உப்பிலி அப்பன் திருத்தலத்தை பற்றியே எழுதி இருக்கிறேன். பெருமாளின் அருள் நம் எல்லோருக்கும் கிடைக்கட்டும்.

இன்னும் சில தினங்களில் மஹாபெரியவாளின் “நூறாண்டு ஜோதி மலர்" - புத்தகம் அச்சாகி வந்துவிடும். வந்ததும் அது சம்பந்தமாக ஒரு காணொலி காட்சி YouTube-ல் வழங்குகிறேன்.

எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்க இறைவனை வேண்டுகிறேன்.

*நன்றி வணக்கம்!*

என்றென்றும் இறைப்பணியில்,

அன்புடன்,

கி.வேணுகோபால்

**********

# ஸ்ரீ மஹாபெரியவா அருளுரை

## ஸ்தல புராணங்கள்




இடம்: சிவாஸ்தானம் பிரம்மபுரீஸ்வரர் திருத்தலம், தேனம்பாக்கம்
Image taken at Sivasthanam Brahmabureeswarar Temple, Thenampakkam

புராணங்களை நம்புகிறவர்கள் கூட "ஸ்தல புராணங்கள்" என்று ஊருக்கு ஊர் சின்னதாக இருக்கிறவற்றை நம்புவதற்கு யோசிக்கிறார்கள். படிப்பாளிகள் எல்லாப் புராணமும் பொய் என்றால், ஸ்தல புராணம் வெறும் குப்பை என்று சொல்லுமளவுக்குப் போய்விடுகிறார்கள். என்ன காரணம் என்றால், அநேக ஸ்தலபுராணங்களில் ஒவ்வொன்றிலும் "இங்கேதான் இந்திரனுக்கு சாப விமோசனம் ஆயிற்று". "இங்கேதான் அகஸ்தியர், பார்வதி-பரமேஸ்வராள் திருக்கல்யாண காட்சியைப் பார்த்தார்; என்று இருக்கிறது. "இது எப்படி சாத்தியம்? அவரவரும் தங்கள் ஊரை உயர்த்திச் சொல்லவேண்டும் என்பதற்காக இட்டுக் கட்டி வைத்திருக்கிறார்கள்' என்று சொல்கிறார்கள்.

இதை பற்றி விஷயம் தெரிந்த ஆஸ்திகர்களைக் கேட்டால், 'கல்பத்துக்குக் கல்பம் அதே கதைகள் திரும்பவும் நடக்கிறது. அதே கதை நடந்தாலும் ஒரே அச்சாக இல்லாமல், ஒரு ஸ்தலத்தில் நடந்த கதை, இன்னொரு கல்பத்தில் இன்னொரு ஸ்தலத்தில் நடக்கிறது. அதனால்தான் அநேக ஸ்தலங்களில் ஒரே புராணக் கதை நடந்ததாகச் சொல்லப்படுகிறது" என்கிறார்கள்.

இதை ஒப்புக் கொள்ள முடியாதவர்கள் கூட ஒவ்வொரு ஊர்க்காரர்களுக்கும் புராணங்களில் வரும் புண்ணிய சம்பவங்கள், தங்கள் தங்கள் ஊரில் நடந்ததாகச் சொல்லிக் கொள்வதில், ஒரு

பெருமை இருக்கிறது என்று, நல்ல முறையில்தான் எடுத்துக் கொள்ளவேண்டும். பாமர ஜனங்கள் தங்கள் ஊருக்கே ராமர் வந்தார். கிருஷ்ணர் வந்தார், மஹரிஷிகள் வந்தார்கள். அங்கே மஹா கொடூரமான பாவங்களுக்கு விமோசனம் கிடைத்தது என்ற நம்பிக்கையைப் பெற்றதால், அந்தக் கோவில்களுக்குப் போவதிலும், உத்சவங்கள் நடத்துவதிலும், உற்சாகம் அடைந்து, நல்ல பக்தி சிரத்தைகளைப் பெற்று இருக்கிறார்களா? இல்லையா? இதைத் தான் நாம் கவனிக்க வேண்டும்.'புத்திசாலிகளான ' நம்முடைய சந்தேகங்கள் இல்லாமல், அந்த எளிய ஜனங்கள் பெரும் நிறைவை ஏன் குலைக்க வேண்டும்? இந்த மாதிரி விஷயங்களில் உண்மை என்பதாக, ஏதோ ஒரு எதார்த்தத்தை (fact) சொல்லி, அதனால் சாமான்ய ஜனங்கள் பெரும் திருப்தியைக் கெடுத்து, அவர்களுக்கு புத்திக் கலக்கத்தை உண்டாக்கக் கூடாது. பகவானே கீதையில் சொல்கிறார்:

**ந புத்திபேதம் ஜனயேத் அக்ஞானாம் கர்ம ஸங்கினாம்**

இப்படிச் சொல்வதால் ஸ்தல புராணங்கள் யதார்த்தமான சத்தியத்தை சொல்லவில்லை என்கிற கோஷ்டியோடு நான் சேர்ந்து விட்டதாகவும், ஆனாலும் அதனால் கூடப் பொது ஜனங்களிடம் நல்ல விளைவை ஏற்படுத்த முடிகிறது என்பதற்காகத்தான், அவற்றை அங்கீகரிக்க வேண்டும் என்று சொல்வதாகவும் நினைத்து விடக் கூடாது. பெரும்பாலான ஸ்தல புராணங்கள், உண்மையுமான விருத்தாந்தங்களைத்தான் சொல்லுகின்ன்றன என்பது என் நம்பிக்கை. சிலது வேறு தினுசாக இருக்கலாம். அப்படி இருந்தாலும் இருந்துவிட்டுப் போகட்டும் என்றுதான் சொல்கிறேன். எல்லா ஸ்தல புராணமும் பொய்யென்று நான் சொல்ல வரவில்லை.

(தொடரும்)

ஹர ஹர சங்கர

ஜெய ஜெய சங்கர

**********

# அரிய ஆலயமும் அற்புத தகவல்களும் (1)

*நாகை காரோகணம் (நீலாய தாக்ஷி ஆலயம்)*

நாகப்பட்டிணம்.



நாகை, நாகப்பட்டிணம் என வழங்கப்படும் ஸ்தலத்தில் உள்ளது. தேவார பாடல் பெற்ற ஸ்தலங்களில் 82-வது ஸ்தலம். பல ஊழி காலங்களுக்கு அப்பாற்பட்டதால் இதனை ஆதி புராணம் என்றும் இறைவனை ஆதி புராணேஸ்வரர் என்றும், இறைவியை நீலாயதாக்ஷி என்றும் ஸ்தல புராணத்தில் உள்ளது.

கிழக்கு நோக்கிய இந்த சிவாலயத்தை தரிசித்தால், முற்றுப் பெறாத கோபுரத்தை கடந்து சென்றால், நாகாபரண விநாயகர், சுதையால் ஆன நந்தியெம்பெருமானையும் முக்தி மண்டபத்தையும் தரிசிக்கலாம்.

ஐந்து நிலை ராஜ கோபுரம், தெற்கு நோக்கிய அம்பாள் சந்நிதி, அருகில் கொடிமரம் தரிசிக்கலாம். அருகில் தியாகராஜர் மூர்த்தி சந்நிதியும், எதிரில் சுந்தரரும் இருக்கக் காணலாம்.

மூலவரான காயாரோஹண ஸ்வாமிக்குப் பின்னால் சப்த ரிஷிகளுக்கு காட்சி தந்த சோமாஸ்கந்தரை தரிசிக்கலாம்.

- ஸ்தல விருக்ஷம் மாமரம். அருகே மாவடி பிள்ளையார் இருக்கிறார்.
- அகஸ்தியருக்கும், சாலுசுக மன்னனுக்கும் திருமண காட்சி அளித்த ஸ்தலம்.
- அதிபத்த நாயனார் அவதரித்து, சிவத் தொண்டாற்றி முக்தி பெற்ற ஸ்தலம்.

கார்த்திகை சோமவாரத்தில் சங்காபிஷேகம் உட்பட அனைத்து திருவிழாக்களும் அமோகமாக நடைபெறும் திருத்தலம்.

நின்ற கோலத்தில் இருக்கும் அம்பாள் மிகச் சிறந்த வரப்பிரசாதி. வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் அருள்வாள்.

மஹாபெரியவா இங்கே வந்து சிலகாலம் தங்கி பூஜித்த ஸ்தலம்.

"கற்றார் பயில் கடல் நாகை காரோஹணம்" என்பது ஞான சம்பந்தர் திருவாக்கு.

இவ்வூரில் மற்றொரு விசேஷமும் உண்டு. அதாவது ஒரு ஊரில் இறப்பு நிகழ்ந்து விட்டால், அவ்வாலயத்தின் கதவுகளை சாத்தி விடுவார். அடக்கத்திற்கு பிறகே திறக்கப்படும். ஆனால் இங்கே அப்படி அல்ல. கதவுகள் திறந்தே இருக்கும், இறந்தவரின் உடல் இடுகாட்டிற்க்கு எடுத்து செல்லப்படும் முன் இந்த கோவில் வாசலுக்கு வந்து வைப்பார்கள். கோவில் மாலை மரியாதை செய்யப்படும் அதன்பிறகு எடுத்து செல்வர். அதாவது இறந்தவரின் உடல் சிவனோடு ஐக்கியம் (காயம்--உடம்பு--ஆரோகணம்-ஐக்கியமாதல் என பொருள்) ஆகிவிடுவதாக ஐதீகம்.

வாழ்வில் அவசியம் ஒரு முறையேனும் தரிசிக்க வேண்டிய திருக்கோவில்.

*****

# அரிய ஆலயமும் அற்புத தகவல்களும் (2)

*ஒப்பிலியப்பன் திருக்கோவில் (திருவிண்ணகரம்)*

கும்பகோணம்.



கும்பகோணத்தில் உள்ள திவ்ய தேசங்களில் ஒன்று இதன் வேறு பெயர் திருவிண்ணகரம்.

மார்க்கண்டேய மகரிஷிக்கு (பிருகண்டு முனிவரின் மகன்) ஶ்ரீ லக்ஷ்மி பிராட்டி தனக்கு மகளாக அவதரிக்க வேண்டும்: ஶ்ரீமன் நாராயணன் தனக்கு மருமகனாக வரவேண்டும் என விரும்பினார். அதுபோலவே தனது துளசிவனத்தில் ஒரு பெண் மகவை கண்டெடுத்து வளர்த்து வந்தார்.

ஆண்டுகள் சில சென்றதும், பூமிபிராட்டி பெரியவளானாள். திருமாலையே மணமுடிப்பேன் என விரதமிருந்தாள். ஒரு நாள் பெருமாள் ஒரு முதியவர் வேடத்தில் வந்து எனக்கு உங்கள் மகளை கொடுங்கள் என வேண்டினார்.

முதியவருக்கு மணம் முடிக்க அவர் விரும்பவில்லை. கண்ணை மூடி த்யானத்தில் அமர்ந்தார். கண்விழித்ததும் பெருமாள் சர்வ அலங்காரத்தோடு காட்சியளித்து, நான் இவளை

மணமுடிக்கிறேன். உனக்கு என்ன வரம் வேண்டும் என கேட்க அவர் மூன்று வரங்களை கோரினார். அதன்படி,

1. நீர் இந்த இடத்திலேயே தங்க வேண்டும்.
2. எனது பெயரிலேயே இந்த க்ஷேத்ரம் அழைக்கப்பட வேண்டும்.
3. என் மகள் சிறுமி, அவளுக்கு சமைக்க தெரியாது. எனவே, அவள் உப்பு இல்லாமல் சமைத்தாலும் அதனை நீர் ஏற்று அருளவேண்டும். என்றார். பெருமாளும் அப்படியே ஆகட்டும் என்று பிராட்டியை மணமுடித்தார்.

அதன்படிதான், இன்றும் இந்த ஸ்தலத்தில் பெருமாளுக்கு நிவேதனம் செய்யும் "திருத் தளிகையில்" உப்பு சேர்ப்பது இல்லை. ஆனாலும் அந்த பிரசாதம் ருசியாகவே இருக்கும்.

**கோவில் அமைப்பு:** கிழக்கு பார்த்த ராஜ கோபுரம். ஐந்து நிலைகளை உடையது. ஸ்ரீ என்னப்பன் சந்நிதி, ஸ்ரீ மணியப்பன் சந்நிதி, ஸ்ரீ தேசிகர் சந்நிதி, ஸ்ரீ ராமானுஜர் சந்நிதி ஆகியவைகள் தனித்தனியாக அமையப் பெற்றுள்ளது.

ஆழ்வார்கள், ஸ்ரீ ராமர், ஸ்ரீ ஆஞ்சநேய சந்நிதிகளும் உள்ளன. 16-வது திவ்ய தேசம்.

**பெருமாள் திருநாமம்:** ஒப்பில்லா அப்பன், ஸ்ரீ வெங்கடாசலபதி, திரு விண்ணகரத்தப்பன், என திருநாமங்கள்.

**தாயார் திருநாமம்:** பூதேவி, பூமிதேவி, தரணி தேவி என்பதாகும். பெருமாள் தாயார் திருமணம் நடந்ததால், இது கல்யாண ஸ்தலம் ஆகும்.

வைகானச ஆகம முறைப்படி இங்கு பூஜை நடைபெறுகிறது.

திருப்பதி பெருமாளுக்கு பிரார்த்தனை செய்து கொண்டு நிறைவேற்ற இயலாதவர்கள் இங்கு வந்து தங்கள் பிரார்த்தனையை செலுத்தலாம். துலாபாரமும், இங்கு வேண்டுதலாக நடத்தப் பெறுகிறது. கும்பகோணம் நகராம். இங்கு தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள் போன்ற வசதிகள் நிரம்ப உண்டு.

கோவில் நகரமாம் கும்பகோணம் சென்று, இவரை மட்டுமல்ல. எல்லா கோவில்களுக்கும், சென்று வாருங்கள்.

*****

# நம்பினோர் கெடுவதில்லை

ஆசிரமம் ஒன்றில் மக்கள் அனைவரும் கூடியிருந்தார்கள் அந்த ஆசிரமத்திற்கு மிகப்பெரிய மகான் ஒருவர் வருவதாக இருந்தது. ஆசிரமத்தின் குருவும் அவருடைய சீடர்களும் மகான் வருவதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் ஆயத்தப்படுத்திக் கொண்டு இருந்தார்கள். மகான் உள்ளே நுழைந்தார் அவருடைய இருக்கையில் வந்து அமர்ந்தார். உபதேசங்களை வழங்கினார். முடிவில் மக்கள் அனைவரும் அவரிடத்தில் அவரவர்களுடைய உள்ளத்தில் எழுந்த கேள்விகளைக் கேட்டனர். மகானும் பதிலளித்தார் பெரும்பாலான மக்கள் இறைவனை அடைவதற்கு வழியை எப்படி நிர்ணயிப்பது என்று கேட்டார்கள் அப்பொழுது மகான் 'சற்று பொறுங்கள் விடையளிக்கிறேன் " என்று கூறி குருவை அழைத்தார் குருவினுடைய காதில் ஏதோ கூறினார். அவர் சொன்னதைக்கேட்டு குருவும் அந்த இடத்தில் இரண்டு பெரிய கம்பங்களை நட்டு அதில் ஒர் கயிற்றை இழுத்துக் கட்டினார். மகான் குருவினுடைய ஒரு சீடரை அழைத்து கண்களை மூடிக் கொண்டு அந்த கயிற்றின் மேல் நடக்குமாறுக் கூறினார். சீடர் தயங்கினார் மகானோ 'உன்னுடைய குருவிடம் சென்று அவருடைய ஆசியைப் பெற்று நட" என்றார். சீடரும் குருவிடம் சென்று அவரிடத்தில் வணங்கி குருவினுடைய காதில் ஏதோ சொன்னார். பிறகு நடக்க ஆரம்பித்தார் சரியாக கயிற்றில் நடந்து சென்றார் மகான் இன்னொரு சீடரை அழைத்து அதே போன்று செய்யுமாறுக் கூறினார். அவரும் குருவிடம் சென்று வணங்கி அவருடைய காதில் ஏதோ கூறி கயிற்றில் நடக்க ஆரம்பித்தார். அவர் பகுதி நடக்கும் போது தடுமாற ஆரம்பித்தார். தடுமாற்றம் கூடியது. இன்னும் ஒரு அடி எடுத்து வைக்கும் பொழுது கால் இடறி கீழே விழுவோம் என்ற நிலை உருவானது அச்சமயத்தில் குரு ஒடிவந்து தனது சீடரின் கரத்தைப் பிடித்து விழாமல் அவரை நடத்தி அடுத்த முனையில் கொண்டு இறக்கினார். இதைக் கண்ட மக்கள் ஒன்றும் புரியாமல் இருந்தனர். எனவே மகானைப் பார்த்து 'இந்த இரண்டு நிகழ்வுகளின் மூலம் நீங்கள் என்ன சொல்ல விழைகிறீர்கள்" என்று கேட்டனர். அதற்கு மகான் புன்முறுவலுடன் சொல்லத் துவங்கினார்.

'முதலாமவர் குருவிடம் சென்று தான் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியின் போதும் குருவின் பெயரை உச்சரிக்கப் போவதாகவும் தன்னை விழாமல் வழிநடத்திச் செல்ல வேண்டும் என்று ஆசிப் பெற்று நடக்கத் துவங்கினார். அதன்படி குருவும் ஆசி வழங்கினார். அவரும் குருவின் நாமத்தைச் சொல்லி கடந்து முடித்தார். ஆனால் இரண்டாமவரோ குருவின் காதில் என்ன சொன்னார் தெரியுமா? என்னை நீங்கள் கீழே விழவிடமாட்டீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு பரிபூரணமாக இருக்கிறது என்று கூறி நடக்கத் தொடங்கினார். எனவே தான் தன் மீது நம்பிக்கைக் கொண்டவன் தடுமாறும் சமயத்தில் குருவே ஒடி வந்து அவனை கடக்கச் செய்தார். நாமும் இது போலத்தான் கடவுளின் நாமத்தைச் சொல்லிக் கொண்டிருந்தால் கடவுளைக் காண

முடியும் என்பது எவ்வளவு உண்மையோ அதைவிட கடவுளின் மீது பரிபூரண நம்பிக்கைக் கொண்டிருந்தால் கடவுள் நம்மைக் கைவிடாமல் ஒடிவந்து காப்பார் என்பதும் உண்மை. ஆகவே கடவுளிடம் நாம் பரிபூரண நம்பிக்கை வைப்பதால் நாம் கடவுளைக் காண்பதை விட கடவுள் நம்மை வந்து காண்பார் என்பது உண்மை" என்று கூறினார். இதைதான் நம் முன்னோர்கள் ' நம்பினோர் கெடுவதில்லை இது நான்மறைத் தீர்ப்பு" என்றுக் கூறினார்கள். ஆகவே நாமும் கடவுளிடம் முழு நம்பிக்கைக் கொண்டால் எப்பொழுதும் கடவுள் நம்மைக் கைவிட மாட்டார் என்ற உறுதியே நம்மை எத்தனை சோதனைகள் வந்தாலும் வழி நடத்திச் செல்லும் அதுவே நமக்கு நல்வழிக் காட்டும்.

வாழ்க வையகம், வாழ்க வளமுடன்!!

அன்புடன்
மனோகர்
குவைத்

*****

# தெரிந்த புராணம், தெரியாத கதைகள்

**- செல்வி அ. பூஜிதா**

குருச்சேத்திரப் போரில் துரியோதனன் என் அஸ்வத்தாமனை முழுமையாக பயந்தடுத்தவில்லை?

சென்றப் பதிப்பில் பாஞ்சாலி திரௌபதியின் முன் ஜென்ம தகவல்களை தெரிந்து கொண்டோம். அதுப்போன்று முன் ஜென்ம தகவல்கள் பற்றி இல்லாமல் ஒரு சிறிய கதை ஒன்றைத் தெரிந்து கொள்வோம்.



திருதராஷ்டிரப் புத்திரன் துரியோதனனுக்கு கர்ணனைப் போலவே அஸ்வத்தாமனும் தோழன் தான். ஆனால் குருச்சேத்திரப் போரில் கர்ணனைப முழுமையாகப் பயன்படுத்தியதுப் போல் அஸ்வத்தாமனை முழுமையாகப் பயன்படுத்தவில்லை. கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் குரு துரோணரே ஆவார். அனைவரும் ஒரே குருக்குலத்திலேயே தான் சாஸ்திரங்கள் மற்றும் போர் கலைகளை கற்றுக் கொண்டனர். எனவே குரு துரோணரின் மகன் அஸ்வத்தாமன் இருத் தரப்பினருக்கும் நல்ல நட்பு வகித்து வந்தான்.

பின்னர் குருச்சேத்திரப் போரைப் பற்றி பேச வந்த கண்ணபிரான். அஸ்வத்தாமனை தனியாக அழைத்துச் சென்று உரையாடிக் கொண்டு இருந்தார். அவ்வேளையில் வந்த துரியோதனனை பார்த்த கிருஷ்ணர் அவரது மோதிரம் ஒன்றை கழட்டி கீழே போட்டார் அந்த மோதிரத்தை அஸ்வத்தாமன் எடுத்து கண்ணன் விரலில் போட்டான். அதைப் பார்த்த துரியோதனன் அஸ்வத்தாமன் பாண்டவர்களுக்கு போரில் உதவி செய்ய ஒப்புக்கொண்டான் என நினைத்து கொண்டு அஸ்வத்தாமன் மீது சந்தேகத்தை வளர்த்து கொண்டான். இக்காரணத்தால் தான் துரியோதனன் அஸ்வத்தாமனை போரில் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

*****

# பலன் தரும் பதிகங்கள்

அனைவருக்கும் நமஸ்காரம்.

உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும் உயிர்வாழ சக்தி தேவை. சிறு குழந்தை முதல் வயது முதிர்ந்த முதியோர் வரை அனைவருக்கும் சக்தி மிகவும் முக்கியம் நாம் நோய்வாய்பட்டிருக்கும் போது நமது ஆரோக்கியத்திற்காக ஊட்டச்சத்து ஏற்பட டானிக் மருந்துகள், மாத்திரைகள், ஊசிகள் முதலியவற்றை மருத்துவர் சிபாரிசு செய்கிறார் அதனால் நமக்கு சக்தி கிடைக்கிறது. அது போல் ஒவ்வொரு ஆணிற்கும் சக்தி தரவல்ல அரிய மருந்து முதலில் தாய், பிறகு ஆயுட்காலம் முழுவதும் பூரண சக்தியை அளிப்பவள் மனைவி அதே போன்று ஒவ்வொரு பெண்ணிற்கும் அவளை கண்ணின் இமை; போலக் காத்து சக்தியை அளிப்பவன் கணவனே. இதைத் தான் எல்லோருக்கும் உணர்த்துவதற்காக நம் எம்பெருமான் ஆண்பாதி பெண்பாதியாகத் தோன்றினார். ஆகவேதான் திருமணப் பந்தம் நடைபெறுகின்றது. ஆனால் பலருக்கு பல காரணங்களால் திருமணம் தடைப்படுகின்றது. தடைப்படுகின்ற திருமணங்கள் இனிதே நடைபெற பலன்தரும் பதிகங்களிலுள்ள திருமணம் நடைபெற உதவும் பதிகத்தை பக்தியுடனும் நம்பிக்கையுடனும் பாராயணம் செய்து பலனை பெறலாம் இப்பதிகத்தைப் பற்றி இறைவனின் பாதக் கமலங்களை வேண்டி இத்தொடரில் எழுதுகின்றேன்.

## பதிகம் - 2

## திருமணம் இனிதே நடைபெறும் பதிகம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"
"மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன்மக்கள் பேறு"
என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப நல்ல வாழ்க்கைத்துணை அமைந்தால் வாழ்க்கை வைரம் போல பிரகாசிக்கும்.

**பதிக வரலாறு**

திருஞான சம்பந்தர் திருமருகில் எழுந்தருளியுள்ள மாணிக்கவண்ணரை வணங்குவதற்காக ஆலயத்திற்கு வந்தார். அது சமயம் ஒரு வணிகப் பெண்ணின் அழுகுரல் கேட்டது. வணிகப் பெண்ணை மணம் புரிய இருந்தவன் இரவில் துயிலும் போது பாம்பு கடித்து இறந்துவிட்டான். அதனால்தான் வணிகப் பெண் அழுது புலம்பினாள். அவளின் அத்துயரம் நீங்கி இறந்தவன் உயிர்பெற்று எழுந்து அவர்களின் திருமணம் இனிதே நடக்க அருளும்படி இறைவனை வேண்டி பதிகம் பாடினார். பதிகம் முடிந்ததும் இறந்தவன் உறக்கம் கலைந்து எழுவது போல எழுந்தான். பிறகு திருமணமும் இனிதே நடந்தது. இன்றும் திருமணமாகாதவர்கள் இப்பதிகத்தைப் பாராயணம் செய்து பலன் பெறுகின்றனர்.

திருமருகல் பண்: இந்தளம்

சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள் உள்மெலிவே

சிந்தா எனுமால் சிவனே எனுமால்
முந்தா எனுமால் முதல்வா எனுமால்
கொந்தார் குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ இவள் ஏசறவே

அறையார் கழலும் அழல் வாயரவும்
பிறையார் சடையும் உடையாய் பெரிய
மறையார் மருகல் மகிழ்வாயிவளை
இறையார் வளைகொண் டெழில்
வவ்வினையே

ஒலிநீர் சடையில் கரந்தா யுலகம்
பலிநீ திரிவாய் பழியில் புகழாய்
மலிநீர் மருகல் மகிழ்வாயிவளை
மெலிநீர் மையள் ஆக்கவும்
வேண்டினையே

துணிநீல வண்ணம் முகில் தோன்றியன்ன
மணிநீல கண்டம் உடையாய் மருகல்
கனிநீல வண்டார் குழலாள் இவள்தன்
அணிநீல ஒண்கண் அயர்வு ஆக்கினையே

பலரும் பரவப்படுவாய் சடை மேல்
மலரும் பிறை ஒன்றுடையாய் மருகல்
புலரும் தனையும் துயிலாள் புடைபோந்து
அலரும் படுமோ அடியாள் இவளே

வழுவாள் பெருமான் கழல் வாழ்கஎனா
எழுவாள் நினைவாள் இரவும் பகலும்
மழுவாள் உடையாய் மருகல் பெருமான்
தொழுவாள் இவளைத் துயர் ஆக்கினையே

இலங்கைக்கு இறைவன் விலங்கல்
எடுப்பத்
துலங்கவ் விரல் ஊன்றலும் தோன்றலனாய்
வலங்கொள் மதில்சூழ் மருகல் பெருமான்
அலங்கல் அவளை அலர் ஆக்கினையே

எரியார் சடையும் அடியும் இருவர்
தெரியாத தொர் தீத்திரளாய் ஆயவனே
மரியார் பிரியா மருகல் பெருமான்
அரியாள் இவளை அயர்வாக் கினையே

அறிவில் சமணும் அலர் சாக்கியரும்
நெறியல்லன செய்தனர் நின்றுழல்வார்
மறிஏந்து கையாய் மருகல் பெருமான்
நெறியார் குழலி நிறை நீக்கினையே

வயஞானம் வல்லார் மருகல் பெருமான்
உயர்ஞானம் உணர்ந்து அடி உள்குதலால்
இயல்ஞான சம்பந்தன் பாடல் வல்லார்
வியன் ஞாலமெல்லாம் விளங்கும் புகழே.

திருச்சிற்றம்பலம்

**வாழ்க்கை அனுபவம்**

இப்பதிகத்தை நம்பிக்கையுடன் பாராயணம் செய்தால் கண்டிப்பாக இறைவன் அருளால் திருமணம் விரைவில் இனிதாக நடைபெற்றதற்கு பல சான்றுகள் உள்ளன. அவற்றில் ஒன்றை எழுதுகிறேன். ஒரு தாய் தன் மகனுக்கு திருமணம் நடைபெற வேண்டும் என்பதற்காக பெருமுயற்சிகளைச் செய்து கொண்டிருந்தார். அவருடைய மகன் அயல்நாட்டில் வேலை செய்து கொண்டிருந்தார். எத்தனையோ முயற்சிகள் செய்தும் சரியான பெண் அமையாமல்

கவலைப்பட்டார். அப்பொழுது தாய் ஜோதிடரை அனுகி ஏதாவது பரிகாரம் செய்தால் வரன் அமையுமா என்று கேட்டார். ஜோதிடரும் மகன் வரும் பொழுது அவரை கங்காதீஸ்வரர் கோவிலுக்கு அழைத்துச் சென்று விளக்கேற்றி வழிபடுமாறுக் கூறினார். விடுமுறையில் மகன் ஊரிலிருந்து வந்தார் அப்பொழுது அவர் தாயார் ஜோதிடர் கூறியதை மகனிடம் தெரிவித்தார் அவர் மகன் மிகவும் இறை நம்பிக்கை உடையவர். கோவிலுக்கும் போகக் கூடியவர் ஆனால் தனது திருமணம் நடைபெறுவதற்காக தானாக கடவுளிடம் சென்று எந்த வேண்டுதலையும் செய்ய போவதில்லை என்பதில் உறுதியாக இருப்பதாகக் கூறி கோவிலுக்குச் சென்று விளக்கு போட மறுத்து விட்டார் விடுமுறை நாட்களும் கழிந்து மகன் ஊருக்கு சென்றார். அப்பொழுது அந்த தாயாரிடம் திருமணம் இனிதே நடைபெறும் பதிகத்தின் பெருமையை அவருடைய நண்பர் கூற தாயாரும் மகனுக்காக மனம் உருகி தினமும் இப்பதிகத்தைப் படிக்க ஆரம்பித்தார். பதினைந்து நாட்களில் தாயாரின் உடல்நிலை பாதிக்கப்பட்டு உடனடியாக மருத்துவமனையில் சேர்க்க வேண்டும் என்ற நிலை உருவானது அயல் நாட்டிலிருந்து தாயை காணுவதற்காக மகன் உடனடியாக வந்தார் வந்தவர் மருத்துவமனையில் தாயாருடன் இருந்தார். அப்போது தாயாருக்கு ஸ்கேன். எடுக்க வேண்டுமென்பதற்காக சென்னையில் புரசைவாக்கத்திலுள்ள ஸ்கேன் சென்டருக்குத் தாயை அழைத்துச் சென்றார். ஸ்கேன் எடுக்குமிடத்தில் ஒரு மணி நேரம் காத்திருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. அப்பொழுது ஸ்கேன் சென்டருக்கு அருகேயுள்ள கோவிலுக்குச் சென்று வரலாம் எனறு தாயார் கூற மகனும் தாயாருடன் கோலிலுக்குச் சென்றார். அந்த கோவில் கங்காதீஸ்வரர் கோவில் தாய் கடையில் இருந்த அகல் விளக்குகளை வாங்கி தான் ஒன்றையும் மகனை ஒன்றையும் ஏற்றச் செய்தார். கோவிலை வலம் வருகையில் இந்த பதிகத்தைத் தாயார் மனமுருகப் படித்தார் பின்னர் ஸ்கேன் சென்டருக்குச் சென்று வேலைகளை முடித்து மருத்துவமனைக்குத் திரும்பினார்கள் இரண்டு நாட்களில் தாயாருக்கு பெரிய பிரச்சனை இல்லையென்று மருத்துவர் கூறி வீட்டிற்கு அனுப்பினார். மகனும் ஊருக்கு கிளம்பி சென்று விட்டார். தாய் மனமுருக தினமும் இப்பதிகத்தைப் படித்துக் கொண்டிருந்தார். எண்ணி முப்பதாவது நாளில் அவர் உடல்நலம் சரியில்லாமல் இருந்ததைக் கேள்வியுற்ற அவருடைய தூரத்து உறவினர் போன் செய்து நலம் விசாரிக்கையில் அவருடைய தெரிந்தவரின் பெண்ணிற்கு வரன் பார்த்துக் கொண்டிருப்பதாகக் கூறினார். தாயும் தன் மகனுக்கு வரன் பார்த்துக் கொண்டிருப்பதாகக் கூறவே அவரும் மகனுடைய ஜாதகத்தை அனுப்புமாறு கூறினார். தாயாரும் அனுப்பி வைத்தார். இறைவனின் அருளால் ஜாதகம் பொருந்தவே அனைவருடைய சம்மதத்தோடு திருமணம் நிச்சயிக்கப்பட்டது. திருமணம் சிறப்பாக நடந்தது.

அன்பர்களே! இந்த பதிகத்தின் மகிமையை என்னென்று சொல்வது இன்னும் மற்றொரு பதிகத்தில் மீண்டும் சந்திப்போம்.

அனைவருக்கும் நன்றி, திருச்சிற்றம்பலம்

அன்புடன்

கலாவதி, ஊட்டி

*****

# பல்சுவை பகுதி

ஆதிசங்கர பகவத் பாதாள ஷண்மதங்களை ஸ்தாபித்தார். ஷண் என்றால் ஆறு ...அத்வைதம் -- எல்லாம் ஒன்றுதான் என்ற சித்தாந்தவாதி எதற்காக ஆறு பிரிவுகள், ஆறு தேவதா மூர்த்தங்களை உருவாக்க வேண்டும்?

"அறுசுவை" என்கிறோம். எல்லாமே பிடிக்கும். ஆனால் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சுவை பிடிக்கும். அதனை விரும்பி உண்பார்கள். அது போலத்தான் ஒவ்வொருவருக்கும் ஓவ்வொரு தெய்வத்தை பிடிக்கும். யாருக்கு எது பிடிக்கிறதோ அதை வணங்குங்கள் மொத்தத்தில் இறை உணர்வு, இறை பக்தி வேண்டும் என்பதற்காகவே இதனை தோற்றுவித்தார். அதன்படி ஓவ்வொரு தெய்வத்திற்கும் தேவையான ஸ்துதிகளையும் உருவாக்கி கொடுத்தார். அந்த வகையில் ஆறு தேவதைகளுக்குமான ஸ்தோத்திரங்கள் நிறையவே இருந்தாலும், சிறு குழந்தைகள் கற்கும் வண்ணம் ஆறு ஸ்துதிகளை இங்கே தருகிறோம். படித்து, குழந்தைகளுக்கும் சொல்லிவைத்தட்டித்து பயன் பெறுங்கள்.

**கணபதி:** வெள்ளிக் கொம்பன் விநாயகனே
வினைகள் தீர்க்கும் ஐங்கரனே
அன்னை பராசக்தி அருந்தவப் புதல்வா
ஆனை முகத்து விநாயகனே

**சூரியன்:** ஆயிரம் கரங்கள் நீட்டி
அணைக்கின்ற தாயே போற்றி
அருள் பொங்கும் முகத்தை காட்டி
இருள் நீக்கம் தந்தாய் போற்றி

**அம்பாள்:** ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை அண்டம் எல்லாம்
பூத்தாளை மாதுளம் பூ நிறத்தாளை புவி அடங்கக்
காத்தாளை ஐங்கணைப் பாசாங்குசமும் கரும்புவில்லும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கும் இல்லையே

**சிவன்:** நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க

**மஹாவிஷ்ணு:** குலம் தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயராயினவெல்லாம் நிலந்தரஞ்செய்யும் நீள்விசும்பருளும் அருளோடு பெருநிலமளிக்கும் வலந்தரும் மற்றும் தந்திடும்

பெற்ற தாயினுமாயின செய்யும் நலந்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்"

**முருகன்:** கந்தா சரணம்; கந்தா சரணம்
சரவணபவ குஹா சரணம் சரணம்
குருகுஹா சரணம்; குருபரா சரணம்
சரணமடைந்திட்டேன் கந்தா சரணம்

இதனை நீங்களும் சொல்லுங்கள். உங்கள் குழந்தைகளுக்கும் சொல்லித் தாருங்கள். நாளும் நன்மையே விளையும்

*****